APPOLO STUDY CENTRE

# TNPSC GROUP II MAIN EXAM

## கட்டாய தமிழ் தகுதித் தேர்வு

**Total Marks: 50** **Time : 1 ½ hrs**

**கேள்வி எண் 1:** **10 மதிப்பெண்கள்**

**பின்வரும் சுருக்கக் குறிப்பிலிருந்து விரிவாக்கம் செய்தல் (300 வார்த்தைகளுக்கு மிகாமல்)**

சங்க காலம் ஒரு வாழ்வியல் பொற்காலம் - வீரம் கொடை – அறநெறி போற்றல் - பிறர்க்கென வாழ்தல்.

**கேள்வி எண் 2:** **10 மதிப்பெண்கள்**

**பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து எழுதுக**

காடுகளைப் பாதுகாத்து வளப்படுத்தும் ஒரு குக்கிராமத்தின் கதை பாரிபடா என்பது. மஹாராஷ்டிரா குஜராத் எல்லையில் உள்ள ஒரு குக்கிராமம். இங்கு வசிக்கும் பழங்குடிகளின் ஒருங்கிணைந்த அல்லது கூட்டு முயற்சியானது இதை உயர்ந்த நிலைக்கு கொண்டு சென்றுள்ளது. வெறும் 1,000 மக்கள் மட்டுமே இருந்தாலும் இவர்கள் தங்கள் காட்டையும் வனத்தையும் பாதுகாப்பதோடு அல்லாமல் அதன் மூலம் ஐக்கிய நாடுகளின் பேணத்தகுந்த மேம்பாட்டு இலக்குகளையும் நோக்கங்களையும் நிறைவேற்றியிருக்கிறார்கள். அதன் மூலம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் பயனடைந்துள்ளனர்.

இந்த கிராமத்தினர் காட்டைப் பாதுகாத்து உள்ளனர். அதனால் காடுகள் இவர்களுக்கு நீர் சேமிக்க உதவுகின்றன. அந்த நீர் வேளாண்மை மற்றும் பண்ணைகளுக்கு உதவுகிறது. பண்ணைத் தொழிலானது வளத்தைக் கொடுத்தது. இது அவர்கள் படிப்பறிவை வளர்த்தது. படிப்பறிவானது அவர்களது எல்லையை விரிவாக்கி அவர்கள் வாழ்க்கை முழுவதையும் மாற்றியமைத்துள்ளது.

இக்கிராம மக்கள் எல்லா வளங்கள் மற்றும் புதிய செயலை சோதனை செய்து பார்ப்பதில் முன்னோடிகள். நீர், நிலம், வனப்பாதுகாப்பு, உயிரினப்பன்மையைப் பதிவு செய்தல் உயிரிவாயு, சூரிய ஆற்றல், பொதுமக்கள் துணையோடு உள்கட்டமைப்பை உருவாக்குதல் ஆகியவற்றை கூட்டாக ஈடுபாட்டுடன் செய்தனர். “மரம் வெட்டுதல் தடுத்தல் மரம் நடுதல் ஆகியவை முதலில் கிராம கூட்டங்களில் நிறைவேற்றப்பட்டு பின் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இக்கிராமத்தில் 445 ஹெக்டர் வனத்திற்குள் மனிதர்கள் மற்றும் மிருகங்கள் வராமல் தடுப்பது மிகப்பெரிய சவாலாக இருந்தது.

**கேள்வி எண் 3:** **10 மதிப்பெண்கள்**

**பின்வரும் பகுதியை தமிழில் மொழி பெயர்த்து எழுதுக**

The Geographic information systems have emerged in the past two decades as an essential tool for urban and resource planning and management. It includes the functions of data entry, data display, data management, information retrieved and analysis. While GIS (Geographic information Systems) deals, with entire geography of the earth including land, ocean and atmosphere the art, science and technology dealing with the acquisition, storage, processing, production, presentation and dissemination, of the earth's information is called the Geoinformatics.

It is the popular means of studies in recent decades which cater the real and useful information to the field of Geography Environmental studies, Town Planning, rural development studies and Defense and Agricultural promotion.

**கேள்வி எண் 4:** **20 மதிப்பெண்கள்**

**a. கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக**

1. அழியாத செல்வம்
2. கடற்பயணம்
3. வாழையடி வாழையாக
4. கிணற்றுத் தவளை போல

**b. பின்வரும் இணைச்சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க**

1. வலை - வளை
2. உலவு - உழவு
3. வளி - வழி
4. அண்ணம் - அன்னம்

**c. பிரித்தெழுதுக**

1. காட்சியழகு
2. பூஞ்சோலை
3. மலரடி
4. சங்கத்தமிழ்

**d. எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக**

1. மான்கள் துள்ளி ஓடும்
2. மாணவன் பாடம் படித்தான்
3. நந்தன் தேநீர் அருந்தமாட்டான்
4. அவன் கல்வி கற்றான்

**e. பிழை நீக்கி எழுதுக**

1. அனில் பலம் கொரித்தது
2. பரவை இறையாகப் பயிரு வகைகளைத் தின்னும்
3. வாளை இழை பரித்து வந்தான்
4. அவன் வாங்கிய நூல் அது அல்ல